**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.65/2025** |
| Deposition of witness | : | P.W.3 |
| Name | : | சுபலதா |
| Father's /Husband Name | : | அன்பழகன் |
| Village | : | எண்கண் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 39 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day of July 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது எண்கண் கீழக்காலணியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சுகன்யாவை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர். அ.சா.2, இந்திராணி கணேசனை தெரியும். அவர் எனது தெருவில் வசித்து வருகிறார். கடந்த 13.06.2024 ம் தேதி மாலை 06.30 மணியளவில் அ.சா.1 க்கு சொந்தமான வீட்டில் இந்திராணி என்பவர் குடியிருந்து வருகிறார். அந்த வீட்டின் கூரையை கார்த்தி என்பவர் பிய்த்துவிட்டார். அது சம்மந்தமாக அ.சா.1 சுகன்யா கேட்டுக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி கார்த்தி அ.சா.1 ஐ பார்த்து குச்சிகாரி தேவடியா என்ற அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையால் அவரது கண்ணத்தில் அறைந்து அ.சா.1 ன் புடவையை உருவி ரோட்டில் போட்டு அடித்தார். அப்போது அ.சா.1 துணியில்லாமல் அழுதுகொண்டு இருந்தார். உன்னால் என்ன செய்ய முடியும் என்று அ.சா.1 ஐ பார்த்து தரக்குறைவாக பேசினார். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

அ.சா.1 சுகன்யா கீழக்காலணியில் வசிக்கவில்லை என்றால் சரிதான். அவ்வப்போது கீழக்காலணியில் உள்ள வீட்டை வந்து பார்த்துக்கொள்வார். கீழக்காலணியிலிருந்து அவர்வசிக்கும் வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும்

என்றால் பக்கம் பக்கம் இருக்கும் தூரம் சரியாக தெரியவில்லை. நான் விவசாய வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். நான் தினமும் பணிக்கு சென்றுவிடுவேன் என்றால் சரிதான். 04.00 மணிக்கு திரும்பி வந்துவிடுவேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் வேலைக்கு சென்றுவிட்டேனா என்றால் இல்லை. அ.சா.1 எனக்கு நாத்தனார் உறவுமுறை வேண்டும் என்றால் அ.சா.1 எனது உறவினர் இல்லை. அ.சா.2 இந்திராணி எனது மாமியார் என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 எனது நாத்தனார் என்பதால் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், கீத்துகொட்டகை எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரி அ.சா.1ஐ திட்டவும்இல்லை தாக்கவும் இல்லை புடவையை பிடித்து அவிழ்க்கவும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி நேரிடையாக எதுவும் தெரியாமல் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.07.22 11:11:04 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`